
0242

# இளையவனின் இதயம்




முகிழ்வு
06.06.1957

முதிர்வு
16.08.2004

302 - 39
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/900/0242



முகிழ்வு
06.06.1957

முதிர்வு
16.08.2004

## திதி வெண்பா

ஆண்டு தாரண ஆடி அந்தத்தில் முப்பான்னிரண்டு ஆகஸ்டு பதினாறு
பூண்டு வளர் பிரதமை முற்பகல் முழு உலகும் - மாண்டதெனப்
பாலநடராச(ன்) ஐயர் உயிர் பறிக்கப் பரந்தெழுந்து
காலமுடன் கலந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் : கந்தசாமி ஐயர் பாலநடராஜன் ஐயர்

அழைக்கப்படுவது : "சின்னபாலா"

புனை பெயர்கள் : "இளையவன்" , "சின்னவன்" , "அம்பிமகன்"

நிரந்தர முகவரி : ஊரெழு மேற்கு, சுன்னாகம்.

தற்காலிக முகவரி : 164/4 A ,W.A.சில்வா மாவத்தை, கொழும்பு – 7

தொழில் : ஊடகவியலாளர்

படைப்புக்கள் :

பத்திரிகை : " நாங்கள்"
"மனிதன்"
"தர்க்கீகம்"
"பொதுமை"
"ஈழநாதம்"
"காலைக்கதிர்"
"தினமுரசு"

சிறுகதைத் தொகுப்பு : காணி உறுதி
வீடு
போர்க்களம்

கட்டுரைத் தொகுப்பு : "யாவரும் கேளிரென"

நாவல் : தொடங்கப்பட்டது 1989 களில் முடிக்கப்படாதது இற்றைவரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனனம்

அந்த நாள் சில சமயம் வரலாறுகூட மறந்துவிடக்கூடும். ஆனால் எனது வாழ்வின் திசை மாறிய அந்தநாளை என்னால் இலகுவாக மறந்துவிட முடியாது. அன்று காலையில் ஒருவிதமான புதிய உற்சாகத்துடன் பலகால இடைவெளியின்பின் பாடசாலை வாசலை நான் மிதித்தேன். 73 இன் டிசம்பர் பகுதியில் க.பொ.த (சா/த) பரீட்சை எழுதி முடிந்த பின்னால் பாடசாலைப் படிப்பு முடிவுற்றுவிடும் என்றுதான் எண்ணியிருந்தேன். 74 இன் ஜனவரி மாதத்தில் தொழில்நுட்பக் கல்வி பயிலும் ஆர்வத்துடன் யாழ். பல்தொழில்நுட்ப நிறுவனத்தில் இயந்திரவியல் மாணவனாக சேர்ந்திருந்தேன். இத்துறையை பூர்த்திசெய்து சுயதொழில் முயற்சியாளனாக சாதாரணமானதொரு வாழ்க்கையைப் பற்றியே எனது சிந்தனைகள் விரிவடைந்திருந்தது.

ஆனால் சங்கரன் செய்த சதியினால் எனது தொழில்நுட்ப நிறுவனக் கல்வி முளைத்த வேகத்திலேயே முறிந்துபோயிற்று. பத்துப்பேர் மட்டுமே எனது வகுப்பில் இருந்தனர். ஜனவரி முதல் மார்ச் வரையில் வகுப்பின் திறமைமிக்க மாணவர்களில் ஒருவனாகத்தான் நானும் இருந்தேன். எனினும் ஆசிரியர்களில் ஒருவர் அடிக்கடி எனது குலத்தின் பெயரால் சொல்லும் சில வசைமொழிகளும் பழிச்சொற்களும் என்னை வெகுவாகப் பாதித்து வந்தன. வழமைபோல ஒரு நாள் நாம் வேலைத்தலத்தில் (work shop) கடமையில் ஈடுபட்டிருந்த வேளையில் நான் செய்த சிறு தவறு ஒன்றுக்காக அவர் என்னை கடிந்துகொண்டவிதம் என்னை கோபமுறச்செய்துவிட்டது. ஏற்கனவே க.பொ.த (சா/த) பரீட்சை முடிவுகள் வெளியாகி நான் உயர்தரக் கல்வி பயிலப் போதுமான தகைமை பெற்றிருந்தேன். இதனால் ஒருவிதமான செருக்கும் எனக்கேற்பட்டிருந்ததும் என்னவோ உண்மைதான். வகுப்பறையைவிட்டு வெளியேறியதும் நேரடியாக கல்லூரி அலுவலகம் சென்று எனது மாணவப் பதிவை இரத்துச் செய்தேன். கல்லூரியிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற அதற்கான அனுமதிக்கடிதத்துடன் யாழ். கச்சேரிக்கும் சென்று எனது வைப்புத் தொகையை மீளப் பெற்றுக்கொண்டு வீடு திரும்பினேன்.

ஆசிரியரின்மீது ஏற்பட்ட கோபத்தைத் தீர்த்துவிட்டதாக எனக்கு ஒரு திருப்தி. இந்த நிகழ்ச்சி என்மீது ஒரு மனத்தாக்கத்தை மிக ஆழமாகவே பதிந்துவிட்டது. அதன்பின்னர்தான் நான் மீண்டும் உயர்தரக் கல்வி பயில்வது என்று முடிவு மேற்கொண்டு பாடசாலைக்குச் செல்லத் தீர்மானித்தேன். அந்தவகையிலேயே உரும்பிராய் இந்துக் கல்லூரியில் உயர் வகுப்பு மாணவனாகச் சேர்ந்துகொண்டேன்.

1974 ஜூன் 5 ஆம் திகதியன்று முதன்முதலாக உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வாசலைக்கடந்து எனது பாதம் பதிந்தது. சாதாரணமான ஒரு பாடசாலை வகுப்பு ஆரம்ப நாள் முற்றிலும் அறிமுகமற்ற புதிய முகங்கள் ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்தவும் பள்ளி மாணவர்க்குரிய நட்பைப் பயன்படுத்தவும் ஆரம்பித்து இருந்த மத்தியான வேளையில் பேரிடியென எமது செவிகளில் ஒரு செய்தி உரைக்கப்பட்டது. காற்று எல்லாத் திசைகளுக்கும் காவிச்சென்ற அந்தச் செய்தியின் சோகம் தாளாமல் ஏறத்தாள அனைத்து முகமலர்களும் வாடிப்போய் இருந்தன. இனியும் என்ன தாமதம் என்றெண்ணியோ என்னவோ எங்கள் மாணவர்கள் அனைவரும் எமது சைக்கிள்களில் பறந்தோம். ஏன் ? எதற்கு ? எங்கே ? என்ற கேள்வியெல்லாம் எழுப்பாமல் ஒவ்வொரு சைக்கிளும் அசுர வேகத்தில் பறந்து யாழ். பெரியாஸ்பத்திரி வாசல்வரை சென்று தரித்தது. உட்புக அனுமதியில்லை என்றபோது கோபம் கொதித்தாலும் ஆங்காங்கே தென்பட்ட காக்கிச்சட்டை பொலிசாரின் பிரசன்னம் எம்மை நாமே அடக்கப் போதுமானதாக இருந்தது.

சுமார் பிற்பகல் 3.30 முதல் சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் எம்மைப்போல பல சீவன்கள் முகத்தில் சோகத்தின் செய்தியை எழுதியபடி வாடிப்போய் காத்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுட்டே பிடிச்சவங்களாம்" என்ற ஒருவரின் விசாரணைக்கு "இல்லை தம்பி அவன் நஞ்சு குடிச்சிட்டான்" என்று இன்னொருவர் பதில் கூறினார். "எங்கை வைச்சு இது நடந்தது." "கோப்பாயில" "ஏன் கோப்பாய்க்கு போனவன் தம்பி" "கோப்பாய் வங்கியை கொள்ளையடிச்சுக் காசு எடுத்துப் போனவங்களாம்" "எத்தனைபேர் போனவை" "தெரியாது, மற்றவையெல்லாம் ஓடித்தப்பிவிட்டாங்கள் இவன்தான் போயிலை வெட்டுக்கட்டைக்குள்ளால் ஓடேக்கை தடக்குப்பட்டு விழுந்தாப்போல பொலிஸ் கிட்ட வந்திட்டுதாம். உடனை இவன் நஞ்சை எடுத்துக் குடிச்சுட்டானாம்" "இப்ப ஆளுக்கு எப்படி" "ஆபத்தில்லையாம். ஆனால் மருந்து குடிக்க மாட்டானாம்." "ஏன் ? ஏனாம் ? " என்றவர் குரலில் பதட்டமும் பரபரப்பும் மிகுந்து காணப்பட்டது.

"ஏனோ ? " முறைத்துப் பார்த்துவிட்டு பதில் கூறத்தொடங்கியவர் "இப்ப எவ்வளவு காலமாய் அவனைப் பிடிக்க திரிஞ்சவனுகள். இப்ப தப்பினா என்ன வீட்டையே போக விடுவானுகள். அவனுகளிட கையில போய்ப்பட்டு சித்திரவதைப் படுறதைவிட சாகலாம் என்றுதானே நஞ்சு குடிச்சவன்." என்று விளக்கம் சொல்லி முடிக்கும்போதே அவரது கண்களில் நீர் கொட்டியது.

இவ்வாறாக ஆற்றாமை மிகுந்து ஒரு மக்கள் கூட்டமே அவனுக்காக காத்திருந்த வேளையில் அவன் மரணப் படுக்கையில் டாக்டர்களிடம் தனது உயிரைக் காப்பாற்ற வேண்டாம் எனக் கெஞ்சிக்கொண்டிருந்தான் என்பதை யாரும் அறிந்திருக்கவில்லை.

அவனது மரணச் செய்தி மாலை 7 மணியளவில் அறிவிக்கப்பட்டபோது மௌனமே ஆக்கிரமித்துக்கொண்டது. கூட்டமும் மெதுவாகக் கரையத்தொடங்கியது. அவன் யார்? ஏன் மரணித்தான் ? அந்த ஒரு மனிதனின் மரணத்திற்காக ஏன் இந்த ஊரெல்லாம் கண்ணீர் சொரிகின்றது. இனம் புரியாத சோகத்தை விதைத்துச் சென்ற அவனது மரணம் ஆயிரமாயிரமாம் பேர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனனத்திற்கு காரணமாய் அமையும் என்பது அப்போது தெளிவாகப் புரியவில்லைத்தான்.

எத்தனையோ இளம் நெஞ்சங்களை ஆகர்சித்த பெருமைக்குரிய மரணத்தை அந்த இளைஞன் படைத்தான். "செய்து முடி. அல்லது செத்து மடி." என்ற வாசகம் மனதில் பதிந்தது. மேடைப் பேச்சு வீரர்களும் வெறும் வாய்ச்சவடால் தனங்களுமே மலிந்து தாண்டவமாடிய நேரத்தில் புதுப்பாதையின் திறவுகோலாய் திகழ்ந்த அந்த இளைஞன் வேறு யாருமல்ல. உரும்பிராய் மண்ணில் பிறந்து ஈழப்போராட்ட வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்துவிட்ட சிவகுமாரன்தான்.

இலங்கை அரசினால் தலைக்கு விலைபோடப்பட்டு தேடப்பட்ட முதல் மகனாக விளங்கிய சிவகுமாரன் மரணம் அந்த நேரத்து இளைஞர்களில் பலருக்கு ஒரு ஆதர்சனமாக விளங்கியது.

உண்பதும், உடுப்பதும், உறங்குவதுமே வாழ்க்கையல்ல. வாழ்க்கையில் சமூகத்திற்கு ஆற்றவேண்டிய கடமைப்பாடுகள் பலவுண்டு. அவற்றைச் சாதிக்க முன்வரவேண்டிய அவசியம் மிகவுண்டு என்பதை அந்த ஒரு மரணம் உணர்த்திவிட்டது.

அதன்பின் வகுப்பறையிலும் நாலுபேர் கூடுமிடங்களிலும் அவனது சரித்திரங்கள் பேசப்பட்டது. அவனது சாதனைகள் விதந்துரைக்கப்பட்டது. பொலிசாரின் கண்களில் மண்ணைத்தூவிய அவனது சாகசங்கள் புகழப்பட்டன. சாதி மத வேறுபாடுகளை தூசென மதித்த அவனின் பழக்க வழக்கங்கள் பற்றிய செய்திகள் பரப்பப்பட்டன.

பொலிஸ் நிலையத்திற்கு பார்சலில் வெடிகுண்டனுப்பிய அவனது திறமையும் தமிழாராய்ச்சி மாநாட்டுக் படுகொலைகளின் கதாநாயகனான A.S.P.சந்திரசேகராவை குறிவைத்து அவன் எடுத்த முயற்சிகளில் வெளிப்பட்ட ஆளுமையும் ஸ்ரீலங்கா அரசின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுபிடியாளனாகவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளருமான அல்பிரட் துரையப்பாவின் காரை வெடிகுண்டு வைத்து தகர்த்த பெருமையும் இன்ன பிறவுமாக அவன்பற்றி பரப்பப்பட்ட செய்திகளைக் காற்று அனைத்துத் திசைகளுக்கும் காவிச்சென்றது.

அவனைப்பற்றிப் பேசுவதிலும் அவனது செயல்களின் நியாயத்தைப் புரிந்துகொள்வதிலும் எமது காலத்தின் சரித்திர நாயகன்தான் என்று ஏனையோருக்கு எடுத்து உரைப்பதிலும் என்னையுமறியாமலே நான் தீவிரமானேன்.

போராட்டப் போக்கில் எப்படி ஐக்கியமானேன்.? என்று திரும்பிப் பார்க்கும் இக் கட்டத்தில் அவனது மரணம் என்னுள் கொண்டுவந்த மாற்றத்தை இனம் கண்டுகொள்வதானால் 1974 ஜூன் 5 ஆம் திகதியை ஒரு போராளியின் மறைவு தினமாக அல்லாமல் பல்லாயிரம் போராளிகளின் ஜனன தினமாகவே குறித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**ஆம் ! மரணம் என்பது வாழ்வின் முடிவல்ல.**

**எனது எதிர்பார்ப்பு ஏமாற்றங்கள் என்றாகிப்போவது வாடிக்கை. தோல்விகளை மட்டுமே சந்தித்துக் கொண்டிருப்பது என் வாழ்க்கை. என்னை எவருக்கும் தேவைப்படாது போனாலும், நான் எல்லோரையும் தேவை என்று தான் கருதுகிறேன். எனவே தயவு செய்து என்பொருட்டான உங்கள் உறவு நிலையை எனக்கு அச்சொட்டாக அறியத்தந்தால் நன்றியுடையவனாவேன்.**

- க. பாலநடராசன்

25.05.88



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாவருமாய் ஒன்றுகூடிப் பிரார்த்திப்போம்.......

2004.08.16 இல் நிகழ்ந்தது ஒரு மரணம் இதுவும் ஜனனதினமாக பரிணமிக்குமானால்....

**பிரார்த்தனை - 1**

எந்த நச்சுச் செடியும் எவர் மனதிலும் முளைக்காதிருக்கட்டும்.

**பிரார்த்தனை - 2**

வன்முறைக்குத் தூண்டப்பட்ட எனது சமூக இளைஞர்கள் அனைவரதும் உடல்கள் ஆகுதியாகவோ, அனாதரவாகவோ மரணிக்கப்படுவதற்குப் பதிலாக மனங்களில் மாற்றம் மலரப்படட்டும்.

**பிரார்த்தனை - 3**

முட்களின் அருகே பூக்கள் மலரட்டும். ரோஜாப் பூந்தோட்டமாய் எம் வாழ்வு மாறட்டும்.

**பிரார்த்தனை - 4**

கட்டாந்தரையில் நாகதாளிச் செடியாய் இன்னும் இருக்க என் மனம் ஒருப்படுகிலது.

**பிரார்த்தனை - 5**

முட்களின் அருகே ரோஜா மலரும் என்ற நம்பிக்கை இந்நாளில் ஜனனமாகட்டும்.
இயல்பு வாழ்வு இங்கே பிறக்கட்டும்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணாடியில்..........

இளையவன்தான் நான்
இளைத்தவன்தான் ஆனால்
சளைத்தவன் அல்ல
பொருள் இல்லாதவன்தான் ஆனால்
பொறுப்பு இல்லாதவனும் அல்ல
இயலாதவனும் அல்ல
பொறுமை இன்மை எனக்குப்
பெரும் குறைபாடேயானாலும்
பொறாமை என்பதற்கு
இடமளிக்க மறுப்பவன்
வருமானம் எனக்கு இல்லை எனினும்
தன்மானம் எனக்கும் உண்டு
எண்ண வேட்கை அதிகம் என்பதால்
உள்ள கடமையை உதறுபவன் அல்ல

## கேளிரென......

நான் நண்பர்களின், தோழர்களின்
உலகத்தால் ஆளப்படுபவன்தான்
நட்பு அல்லது அன்பு என்பது
தேவையறிந்து உரிய நேரத்தில்
உதவத் தூண்டும் உணர்வு
என்றே நான் அர்த்தப்படுத்துவேன்
அல்லாமல் முகம்பார்த்து முகமன்
பேசுதலும் முதுகு மறைப்பில்
புறணி பேசுதலும் நட்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாக இருக்க முடியும்
என நம்பவில்லை எனினும்
உங்கள் நண்பர்களாக எனக்கு
இனம் காட்டப்பட்டவர்களைப்
பொறுத்தவரையில் உங்களிடம்
இருந்து பயன்பெறுபவர்களாக
தங்களது சுயநல வட்டங்களை
மீற விரும்பாதவர்கள் - மீற முடியாதவர்கள்
என்றே நான் புரிந்துகொண்டிருக்கிறேன்
இதில் சிலசமயம் உங்கள் நண்பர்களுக்கும்
ஏன் உங்களுக்கும்கூட கோபம்
ஏற்படலாம் என் கணிப்பில்
தவறு இருக்குமானால் காலம்
பதில் கூறட்டும் நான் எக்காலத்திலும்
ஏமாற்றுப் பேர்வழியாக இருக்க
இசையாதபோதும் ஏமாளியாக
ஏமாற்றப்பட்டவனாக உலகம்
குறித்துக்கொண்டால் நான் அதுபற்றிக்
கவலைப்பட்டுப்போவதில்லை.

**இன்னொரு பார்வையில் பாலன்....**

**பிரியமானது - நட்பு**

**பிரியமற்றது - அடிமைப்படுத்தல்**

**பிடித்தது - உழைப்பு**

**பிடிக்காதது - சோம்பல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டிலிருந்தோர் மடல்.....

அன்பு அண்ணனுக்கு
அ / எருமைத் தங்கை இவள்
அனேக வணக்கங்கள்
நலம் பல நம்மிடம்
உம்மிடம்
அதுவே என்றால்
மகிழ்வு பல நூறு
நீங்கள்
பூக்களை மட்டுமல்ல
முட்களையும் நேசிக்கத் தெரிந்தவர்தாம்
புற்றரை மட்டுமல்ல
கட்டாந்தரையிலும்
கால்பதித்து நிற்பவர்தாம்
பன்னீர் மட்டுமல்ல
கூவம் நதியிலும்
குளிக்கத் தெரிந்தவர்தாம்
மகுடம் மட்டுமல்ல
சிலுவையும் சுமக்கும்
தைரியம் கொண்டவர்தாம்
ஆனால்
உமக்குக் கிடைப்பது
பூவே ஆகட்டும்
புற்றரையின்றேல்
கற்றரையாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடினமில்லாதிருக்கட்டும்
பன்னீரில்லாவிடினும்
தண்ணீராவது
குளிக்கக் கிடைக்கட்டும்
மகுடம் வேண்டாம்
உள்ள தலையாவது
ஒழுங்காயிருக்கட்டும்
மனதில் மகிழ்வு
என்றும் தங்கட்டும்
ஆரோக்கியத்தை
கவனித்துக்கொள்க
தீபாவளிக்கு வரக்கிடைக்காவிட்டால்
அட்வான்சாகவே
தீபாவளி வாழ்த்து

ராதா. க
1987.10.09

**இன்னொரு பார்வையில் பாலன்....**

**போராடியது : வாழ்வதற்காக**

**தவிர்த்தது : சாவை**

**விரும்பியது : சமதர்ம சகோதரத்துவ சமூகம்**

**விரும்பாதது :...........**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பின் சின்னண்ணாவிற்கு

தொலைதூர ஒளி நாடி
தொடங்கிய பயணமிது
படுகுழிப் பள்ளம்தன்
பாதையின் முடிவா?
சுடுகாட்டுச் செஞ்சாம்பல்
குளித்தெழுந்த பின்னராதல்
சுதந்திரத்தின் அடிநெருப்பு
சீராகப் பற்றிடுமா?
வட்டமிட்டுப் பறக்கும்
வல்லூறின் மத்தியில்
தட்டுத் தடுமாறித் தவிக்கின்ற
வேளையிலே — கோழிக்குஞ்சுக்கு
கோபம் விளைந்தாலோ....
இந்த நிலைமை
அனுபவமும் நிதானமும் வழிகாட்டியாய்
அமையும் உடலின் ஆரோக்கியத்தைக்
கவனித்துக்கொள்

லோசனா . க

**இன்னொரு பார்வையில் பாலன்....**

**இலட்சியம் : சமாதான சகவாழ்வு**
**வெற்றி கொண்டது : மானுடத்தை**
**தோற்றுப் போனது : அர்த்தமற்ற பகைமையில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினக்குறிப்பிலிருந்து சில வரிகள்.....

0 பாதங்கள் பயணம்
போகத் தயார் என்றால்
பாதைகளா மறுப்புச்
சொல்லப் போகின்றன

0 முற்பகலில் விதைத்தது
பிற்பகலில் அறுவடையாகலாம்
கண்முன்னே காணும்
உதாரணங்களால் கலங்கும் மனம்

0 மொட்டுக்களின் இதழ்களைப்
பிரித்து விடுவதால் மலர்கள்
மலர்ந்துவிடுவதில்லை
மொட்டுக்கள் இயல்பாக
இதழ்விரிக்கும்போதுதான்
மலர்கள் மலர்கின்றன

0 கவலைகள் என்ன
கைக்குழந்தைகளா
காவிக்கொண்டு திரிவதற்கு

0 பேசும் முன் கேளுங்கள்
எழுதும் முன் வாசியுங்கள்
செலவழிக்க முன் உழையுங்கள்
குற்றம் செய்யமுன் நிதானியுங்கள்
முதலீடு செய்யமுன் விசாரியுங்கள்
ஓய்வு பெறமுன் சேமியுங்கள்
இறக்கமுன் தர்மம் செய்யுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

0 விறகையும் சுமக்கும்
விரும்பும் இடமெங்கும்
பறந்து செல்லும்
பாதை எதுவானாலும்
எரிபொருள் செலவின்றி
ஓடும் வாகனமாம்
ஈருருளி என்றே அறி

0 **My country right or wrong**
**My mother Lame or blind**

0 சாவதை விடவும் சங்கடப்படுவதே மேலானது
என்பதுவே மனிதனின் முத்திரை வாசகமாகவுள்ளது

0 வெற்றிக்கு தந்தையர்கள் ஆயிரம் உண்டு
ஆனால்
தோல்வி பெரும்பாலும் ஒரு அநாதைக் குழந்தை

0 நாம் கற்ற பாடமும் பெற்ற அனுபவமும்
எதிர்கால சந்ததிக்கு என்ன வழியைக்
காட்டப் போகிறது என்பதைக் கூறாமல்
இருந்துவிடுவோமானால் நம்மையும்
வரலாறு மன்னிக்காது

0 பாளையாம் தன்மை செத்தும்
பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும்
காமுறும் இளமை செத்தும்
மீளும் இவ்வியல்பும் என்னே
மேல்வரும் மூப்புமாகி
நாளும் நாள் சாகின்றோம்
ஆனால் நமக்கு நாம் அழாதது என்னே

-குண்டலகேசி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

0 நாய் செல்லும் பாதையில்
அதன் வழியை நீங்கள் மறித்தால்
அது விழுந்து உங்களைப் பிடுங்கும்
இது உங்களுக்குத் தேவைதானா ?
அந்த நாயை அடித்து உங்களால்
கொன்றுவிடக்கூட முடியும். ஆனால்
அப்படிக் கொன்றுவிடுவதால் அந்த நாயின்
கடியினால் உண்டான ரணத்தைக்
குணப்படுத்த முடியுமா ?

-ஆபிரஉறாம் லிங்கன் -

0 நான் தமிழன் தமிழன் அல்லாத
இன்னுமொருவன் அல்ல
என் மொழி தமிழ் தமிழ் அல்லாத இன்னொன்று அல்ல
இது ஒரு வாக்குமூலம்

0 ஒரு ஆண் கல்யாணம் செய்துகொள்ளும்போது
தனக்காகவே செய்து கொள்வதாகவே நினைக்கிறான்
பெண்ணும் அப்படியே நினைக்கிறாள்
தனக்காகச் செய்யும் எந்தக் காரியமும்
அதிருப்தியாகத்தான் முடியும்
கல்யாணத்தின் உண்மையான தாத்பரியம் அதுவல்ல.
தனக்காக வாழ்ந்துகொண்டிருக்கும்
ஒருவனோ ஒருத்தியோ
இன்னுமொருவருக்காகவும் வாழ்வதன் ஆரம்பமே
திருமணம்.

0 மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி பெறும்
உண்ணீர் உண்ணீர் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபசரிப்பார் தம் மனையில்
உண்ணாமை கோடி பெறும்
கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்
கோடானு கோடி கொடுப்பினும்
தன்னுடைய நா
கோடாமை கோடி பெறும்

## முன்னுரையிலிருந்து சில வரிகள்.....

தனிமனிதர்களின் வாழ்க்கைக் காலப் பகுதியில் ஐந்து அல்லது பத்து வருட காலம் என்பது மிகப் பெரியதொரு காலமாகும். ஆனால் ஒரு இனத்தின் வரலாற்றில் இது மிகக் குறுகிய காலமாகவே கணிக்கப்படக்கூடும். இந்த வகையில் கடந்த காலத்தில் நான் நடந்த பாதையினை திரும்பிப் பார்க்கும் முயற்சியே இதன் நோக்கமாகும்.

அடிப்படையில் இன்றைக்கு எமது மக்கள் சுமந்து நிற்கும் சோகங்களுக்கும் - இழப்புக்களுக்கும் காரணமான இளைஞர் சந்ததியில் நானும் ஒருவன் என்ற வகையில் எமது சுயமான எண்ணங்களை இந்த மக்களுக்கு விளக்கும் முயற்சியே இது. அத்துடன் தலைமறைவு அரசியல் (Underground Politics) வாழ்க்கையுடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டிருந்தபடியினால் இருண்ட பகுதியின் சில உண்மைகளை எனது அறிவுக்கு எட்டியவரை வெளிக்கொணர முயற்சிக்கிறேன். பின்னால் கடந்த காலத்தை மீட்டுப்பார்க்க விரும்பும் பலரது முயற்சிக்கும் முன்னோடியாகவும் தூண்டுகோலாகவும் இது பயன்படுமானால் மகிழ்ச்சி அடையலாம்.

தோழமையுடன்
இளையவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தோழனின் துடிப்பு........

" ஆண்டவரே இவர்களை மன்னியும்
இவர்கள் செய்வது இன்னதென்று
தெரியாது செய்கிறார்கள "

மனுக்குலத்தின் விடிவுக்காக போராடிய யேசுகிறிஸ்துவின் வாக்கியம் இது. எவர்களது விடிவுக்காக பாடுபட்டாரோ அவர்களே இவரை மரணத்திற்கு கையளித்தனர். சித்திரவதைசெய்து கொன்றொழித்தனர். இது விடுதலைப் போராட்டப் பாதையில் நடைபெறுகின்ற **தவிர்க்க முடியாத, தவறுதலான, தற்செயலான என்ற போர்வைக்குள் மறையும் மறைக்க முடியாத - மறக்க முடியாத மரணங்கள்.**

விளைநிலத்திலே பாடுபட்டு பண்படுத்தி செய்கை பண்ணப்படும் பயிரிலே களை எடுக்கவேண்டியது அவசியம்தான். பயிரை அழித்து, பயனைச் சிதைத்து மண்ணையே நாசமாக்கும் களைகளைக் களைவது அவசியம்தான். அதற்காக பயிரிடையில் தெரிகின்ற கலப்பு நெல்லையும், முண்டான் போன்றவற்றையும் களையத்தான் செய்கிறோம். காரணம் தூய்மையான, கலப்பற்ற நல்ல தூய இன விளைச்சலைப் பெறவேண்டும் என்பதற்காக. ஆனால் அவை நச்சுக் களைகள் அல்ல. உணவாக உபயோகித்து உயிர்வாழ ஏற்றவைதான். தனியாக, சிறப்பாகப் பயிரிடாத காரணத்தால் அவைகளைகள் ஆகின. முண்டான் செய்கைக்கு இடையில் நெல் இருப்பின் நெல்லே களையாகிவிடும்.

இதுபோலத்தான் தூய விடுதலைப் பாதையில் சகோதரப் படுகொலைகள் நோக்கப்படவேண்டி உள்ளது. மாற்றுக் கருத்துடையோரெல்லாம் எதிரிகளல்ல. தூய்மையைக் குழப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலப்புகளை அகற்றலாம். ஒதுக்கலாம். அழிக்கத் தேவையில்லை. கெட்ட களைகளை நாசினி கொண்டு அழிக்கலாம். அவசரப் பார்வையில் எல்லாவற்றையும் அழித்தல் சரியாகப்படலாம். ஆனால் நெல்லோடு கலந்த கலப்பு நெல்லும் பயிர்தானே. அதை அழிக்கப்போனால் பயிரே அழிந்துவிடும். பயிரின் இனத்தைச் சேர்ந்த கலப்புத்தானே அது. அதனை வேறாக்குவதே சிறந்தது. அதுவும் போராட்டப் பாதையில் திட்டமிடப்படவேண்டிய வேலைத்திட்ட வடிவத்தில் ஒன்றாகும். எதிரிக்கு முன் நீட்டப்படும் ஆயுதம் இங்கும் நீட்டப்படுமானால் யாருக்கு விடுதலை? என்ற கேள்வி எமக்கு முன்னால் சென்றுகொண்டே இருக்கும். அவசரம் போராட்டமல்ல. அவதிக்கு விடுதலை வரப்போவதுமில்லை. அப்படியானால் அன்று 1972 களில் எழுச்சி பெற்ற போராட்டம் 1983 களில் என்றாலும் முடிந்திருக்க வேண்டும். 1983 களில் அலை அலையாய் அணிதிரண்ட எழுச்சியை ஆளமுடியாததாலேயே பல இயக்கங்கள் பலம் பெற்றன. எழுச்சிகொண்டோரின் நோக்கம் ஒன்றுதான். எதிரியை அழிப்பது. விடுதலையை வெல்வது. நிம்மதியான வாழ்வைப் பெறுவது. இதற்காக அணிதிரண்டவர்களெல்லாம் கண்முன்னே தென்பட்ட விடுதலை இயக்கங்களிலெல்லாம் இணைந்தனர். காத்திருக்கப் பொறுமையில்லை. அவசரம். எதிரியை எதிர்க்க ஆயுதம் வைத்திருந்தோரெல்லாம் ஆபத்பாந்தவர்களாகத் தென்பட்டனர். அவர் பின்னால் அணிதிரண்டனர். பின்னர் தலைமை தலைமை எனத் திசை மாறினர் தலைவர்கள். இனத்தின் விடுதலைக்காக அணிதிரண்டவர்கள் தலைமையைக் காக்க போராடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதுகூடத் தலைமை தாங்கியவர்கள் வளர்த்த வளர்ப்பு முறைதான். போராட இணைந்தவர்கள் வகுத்த முறையல்ல. போராட்டப் பாதையில் தம்மை இணைத்துப் போராடிய உண்மைப் போராளிகளுக்கு இது புரியும். வரலாறு தெரியாத இன்றைய இளசுகளுக்கு இது புரியாதிருக்கலாம். எத்தனை அப்பாவிப் போராளிகளின் உயிர்கள் மாற்று இயக்கம் என்ற பேரால் அழிக்கப்பட்டுள்ளன. தவிர்க்க முடியாத, தவறுதலான, தற்செயலான மரணங்கள் இவை எனப் பட்டியலிட்டு மறைக்கப்படவேண்டிய மரணங்கள்தான் இவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரோகிப் பட்டியலிலிருந்து இத்தகையவர்களின் பெயர்கள் அகற்றப்பட்டு விடுதலைப் போராளிகளின் பெயர்களுடன் இவர்களின் பெயர்களும் இணைக்கப்படத்தான் வேண்டும். இனியும் வேண்டாம் சகோதரப் படுகொலைகள். இனியும் வேண்டாம் தவிர்க்க முடியாதது, தவறுதலானது, தற்செயலானது என்ற போர்வைகள். எவருக்கும் வேண்டாம் எம்மினத்தை நாமே அழிக்கும் கோபம். எவருக்கும் வேண்டாம் நம்மை நாமே காட்டிக்கொடுக்கும் துரோகத்தனம். பாடுபட்டு கட்டிக்காத்த போராட்ட வரலாறு கொச்சைப்பட வேண்டாமே. ஆழ நட்டு வேர் பதிக்க நீர் விட்ட போராளித் தோழர்களை ஒரு கணமும் மறக்க வேண்டாமே. தன் இனத்தின் விடிவு கிட்டும் என்றுதானே வெடிகுண்டாய் தம்முடலை வெறுக்கின்றனர் போராளிகள். வாழ்பவனுக்குத்தான் எத்தனை ஆசைகள். அவர்களுக்கு இல்லையா ஆசைகள். அவர்கள் எங்களுக்காக மரணிக்கும் ஆசை கொண்டவர்கள். நாங்கள் மட்டும் ஏன் நமக்காக மட்டும் ஆசைப்பட வேண்டும். ஆரம்ப காலத் தோழர்களே, போராளிகளே நீங்கள் எங்களுக்கு வேண்டும். விண்ணகம் சென்றவர்கள் பெயரால் கேட்கிறேன் நீங்கள் எங்களுக்கு வேண்டும். உங்களை இழந்த பின் எங்களுக்கு என்ன இருக்கிறது. இந்த விடுதலை நீங்கள் சிந்தித்தது. இந்த விடுதலைப் போராட்டம் உங்களுக்குத் திணிக்கப்பட்டது. சரியான வழியில் போனால் அவசரம் தேவைப்படாது. அவசரம் இல்லையேல் அநியாயப் படுகொலைகள் நடைபெறப் போவதுமில்லை. எனவே **சகோதரப் படுகொலைகள் இனிமேல் வேண்டாமே.** நில்லுங்கள், நிதானியுங்கள், செல்லுங்கள். **சொல்லுங்கள் " சகோதரப் படுகொலைகள் இனிமேல் வேண்டவே வேண்டாம் "**

- பிரதீப் -
**19.08.2004**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி நிச்சயம் நூலில் இருந்து.....

வாழ்க்கையில் அவசியப்படும் போது அஞ்சவேண்டும் - பழிக்கு அஞ்ச வேண்டும் - பண்புள்ள பெரியோரின் சினத்துக்கு அஞ்ச வேண்டும் - அறியாமைக்கு அஞ்சவேண்டும் அநாவசிய செலவுக்கு அஞ்ச வேண்டும் எல்லாவற்றையும் விடச் சமூகத்திற்கு தீமை விளைவிக்கிற, சமத்துவத்திற்கு வேட்டு வைக்கிற, பகுத்தறிவிற்குப் பொருத்தமில்லாத, சமதர்மத்திற்கு விரோதமாய் இருக்கிற எந்தச் செயல் செய்யவும் நாம் அஞ்சியாக வேண்டும்.

" எந்த மனிதன் தன்னை, தன்னைச் சுற்றியுள்ளவர்களை, இயற்கையை, இந்தப் பிரபஞ்சத்தை மனமார நேசிக்கப் பழகிக் கொள்கிறானோ, அந்த மனிதன் எத்தனைத் துயரத்தையும் வென்று வாழ முயல்வானே தவிர, மரணத்தை தழுவிக் கொள்ள மாட்டான்"

- பேராசிரியர் 'நல்மன' பெரியார்தாசன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ், 50 கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org